www.padippakam.com

# நாவலர் நவசோதியார் நினைவுப் பாமாலை

தோற்றம் - 2 - 4 - 1941 மறைவு - 4 - 1 - 1990

அன்பிற் சிறந்தவரே! தமிழில்
ஆர்வமிகு நாவலரே! உலகில்
இன்னல்க ளற்றுப்போய் எங்கும்
இன்பம் பெருகிடவும், தமிழர்
வாழ்வில் ஏற்றமது பெற்று
வளமொடு வாழ்ந்திங்கோர் நாடு
வாய்க்கப் பெற்றவராய்ப் பண்டை
வளத்தோடு வாழ்ந்திட விழைந்தீர்!

நவமெனில் புதுமை யென்பார்!
நல்ல சோதியெனின் முழுமுதல்
சிவ மெனும் இறைவன் உருவம்!
சிறப்பான பெயருமக்கு! நீரோ
உலகில் பலநாடும் சென்றீர்!
உணர்த்தினீர் தமிழின் சால்பை!
கலைஞரின் பெயரிலேயே கழகம்
கண்டுநீர் தொண்டும் செய்தீர்!

பிறந்த மண்தனிலே மிகவே
பெருமை சேர வாழ்ந்து
பரந்த உலகினெங்கும் புகழ், சீர்
பரவிட வாழ்தவரே! தமிழில்
சிறந்த நூல்கள் எழுதிச்
சேவைகள் செய்தவரே! யாண்டும்
மறைந்த அறிஞர்தம் நூற்கள்
பலவும் மீளவெளிக் கொணர்ந்தீர்!

வானொலி, நாடகங்கள், சுவைசேர்
வண்டமிழ்ப் பேச்சுரை யாற்றனீர்!
தேனெனும் தமிழைச் சிறுர்க்குச்
செப்பமாய்ப் பயிற்றுவித்தீர் பயின்ற
யானெனும் செருக்கு இன்றி இணைந்தே
எவரோடும் தொண்டு செய்தீர்! வென்றீர்
ஏனெனக் கேட்காமலே உழைப்பை
எவர்க்கும் வழங்கினீர் மகிழ்ந்தே!

மூவர்க்கு விழாவெடுத்தீர்! காணி
மீட்கப்பொ ருதிடும்போ ராளியர்
யாவர்க்கும் துணைநின்றீர்! ஏதிலி
என்றிங்கே வந்தார்க்கு உதவி
மேலினீர்! அகழ்வாய்வ நூலக
மெனநற் பணிசெய்தீர்! சிந்து
மேலிப்பள்ளி, பண்பகம் நிறுவினீர்!

மனமறிந்தே நடக்கும் துணைவி
மகிழ்வினைக் கூட்டும் மக்கள்!
தனையீன்ற அன்னை உடன் பிறந்தோர்
தகைஞர் உறவொடுவா மாது
மறைந்ததேன்? வானகதார் அழைப்போ?
வளர்ந்து உம் மக்கள் உலகில்
சிறப்புடன் வாழ அருள்வீர் !
தேவுனை வணங்கி நின்றோம்!

படிப்பகம்

www.padippakam.com

**பெற்றோர்**
திரு வயிரமுத்து கணபதிப்பிள்ளை
திருவாட்டி பரமேசுவரி

**துணைவி**
திருவாட்டி ரூபராணி நவசோதி

**மக்கள்**
செல்வன் மணிவண்ணன்
செல்வி வதனி
செல்வி யாழினி

**உடன்பிறந்தோர்**
தரு சத்தியமூர்த்தி
திரு இரவீந்திரன்
திரு கனகேஸ்வரன்
திரு வசந்தகுமாரன்
திருவாட்டி ஈஸ்வரி

**கல்வித் தகுதி**
முதுகலை (எம்.ஏ)

**எழுதிய நூல்கள்**
1. பல்லவர் காலமும் பக்திக் கோலமும்
2. நாட்டுப் படலில் மலையக வரலாறு
3. கதைப் பூங்கா
4. காலத்தின் குரல்கள்
6. ஓடிப்போனவள்

**வெளிக்கொணர்ந்த இதழ்கள்**
1. வெண்ணிலா
2. தமிழோசை
3. சிந்து

**ஆற்றிய பணி**
1. விரிவுரையாளர்
2. மொழிபெயர்ப்பாளர்
3. இதழாசிரியர்
4. பயிற்றுசிரியர்
5. நெறியாளர் சுவடித் திணைக்களகம்
6. அகழ்வாய்லாளர்
7. நூலகர்
8. ஒலிபரப்பாளர்
9. ஊராட்சிமன்ற அதிகாரி

படிப்பகம்